**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பெரியகுளம்.**

**அ.வ.எண். 21/2023**

1873 ம் ஆண்டு சாட்சிய சட்டத்தின் கீழ் இந்நீதிமன்றம் சாட்சி உறுதி செய்யப்பட்டு 20–04–2026 ம் தேதி வாக்குமூலம் பதியப்பட்டது.

பெயர் : **(பி.வா.சா.2 ) கலாவதி** தேதி : 20.04.2026

**வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1) நான் எதுவரை படித்துள்ளேன் என்றால், 8 ம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனது நிரூபண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் அனைத்தும் யார் சொன்னதின் அடிப்படையில் தயார் செய்யப்பட்டது என்றால் எனது கணவர் சொன்னதின் அடிப்படையில் தயார் செய்யப்பட்டதாகும். இவ்வழக்கு வாதிகள் இவ்வழக்கை எதற்காக தாக்கல் செய்துள்ளார்கள் என்றால், நான் தாவா சொத்தை கிரையம் பெற்றுள்ளதால், என் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள். வாதிகள் குடும்பத்தின் வரவு செலவுகள் பற்றிய விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நான் கிரையம் பெற்ற தாவா சொத்தானது யாருக்கு பாத்தியப்பட்டது என்றால் 1 ம் பிரதிவாதியான கோவிந்தராஜுக்கு பாத்தியப்பட்டதாகும். எதன் அடிப்படையில் தாவா சொத்தானது 1 ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டது என்றால் அது அவருடைய தாத்தா வழி வந்த சொத்தாகும்.

2) தாவா சொத்தை கோவிந்தராஜ் பாகப்பிரிவினை மூலமாக பெறும்போது அவர் வேறு யாருக்காவது பணம் ஏதாவது கொடுத்துள்ளாரா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. எனது நிரூபண வாக்குமூலத்தில் கோவிந்தராஜ் அவர்கள் பணம் கொடுத்து வாங்கியதாக சொல்லியுள்ளது தவறு என்று சொன்னால் சரியல்ல, அவர் கடன் வாங்கி கொடுத்தார். எனது நிரூபண வாக்குமூலத்தில் 1 ம் பிரதிவாதியின் வருமானத்தை கொண்டு அவரது மக்களான வாதிகளுக்கு திருமணம் செய்து வைத்துள்ளார் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அதேபோல் 2 ம் பிரதிவாதிக்கும், 1 ம் பிரதிவாதி தனது சொந்த வருமானத்தின் மூலம் தான் திருமணம் செய்து வைத்தார் என்றால் சரிதான். தாவா சொத்தினை கோவிந்தராஜ் கிரையம் பெறவில்லை என்றால் சரிதான். தாவா சொத்தானது கோவிந்தராஜ் என்பவரின் தாத்தா சொத்து என்பதால் அவருக்கு தனிப்பட்ட முறையில் முழு உரிமை வராது என்று சொன்னால் சரியல்ல.

3) தாவா சொத்தானது 1ம் பிரதிவாதிக்கு தனித்து பாத்தியப்பட்ட சொத்து என்பதை எதன் அடிப்படையில் தெரிந்து கொண்டேன் என்றால், 1ம் பிரதிவாதி பெயரில் உள்ள பாகப்பிரிவினை ஆவணம் மற்றும் வில்லங்க சான்றை பார்வையிட்டு தெரிந்து கொண்டோம். தாவா சொத்தினை கிரையம் பெறும் போது வழக்கறிஞரிடம் எந்தவொரு ஆலோசனையும் பெறவில்லை என்றால் சரிதான். வாதிகளுக்கு 2013 மற்றும் 2015 காலகட்டத்தில் தான் திருமணம் நடைபெற்றது என்றால் சரிதான். வாதிகள் திருமணத்திற்கு பின்னிட்டு தனித்து தனி குடித்தனம் சென்றுவிட்டார்கள் என்றால் சரிதான். வாதிகள் 2015ல் தனிக்குடித்தனம் சென்றுவிட்ட நிலையில், 2017ல் வாதிகளுக்கு சொத்து வாங்குவதற்கு 1ம் பிரதிவாதி 2ம் பிரதிவாதியிடமிருந்து கடன் வாங்கி கொடுத்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான், மேற்படி விவரம் எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியாது.

4) எனது நிருபண வாக்குமூலத்தில் 6ம் பக்கத்தில் 1ம் பிரதிவாதியின் மருத்துவ செலவினை 1ம் பிரதிவாதி தனிப்பட்ட வருமானத்தின் மூலம் செலவு செய்து கொண்டதாக குறிப்பிட்டுள்ளனே் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி அவரது வருமானத்தை வைத்து தான் அவருடை மருத்துவ செலவினை கவனித்து வந்தார் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி கடன் வாங்கி மருத்துவ செலவு செய்ததாக என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது தவறு என்று சொன்னால் சரியல்ல. சாட்சி தாமாக 1ம் பிரதிவாதியின் மருத்துவ செலவிற்கு தனலட்சுமி என்பவரிடமிருந்து கடன் பெற்றுக் கொடுத்தேன். மேற்படி சங்கதிகள் எனது நிரூபண வாக்குமூலத்தில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

5) நான் தாவா சொத்தினை உரிமையில்லாத நபரான 1ம் பிரதிவாதியிடமிருந்து கிரையம் பெற்றுள்ளதால், நான் பெற்றுள்ள கிரையம் செல்லாது என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தானது 1ம் பிரதிவாதியின் தாத்தா சொத்து என்பதால், 1ம் பிரதிவாதிக்கு அவரது வாரிசுகளான வாதிகள் மற்றும் 2, 3 பிரதிவாதிகளுக்கு உரிமையுள்ளது சரியல்ல. நான் பெற்றுள்ள கிரையமானது வாதிகளை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. எனது மருமகனான 2ம் பிரதிவாதியின் சூழ்ச்சியின் அடிப்படையில்

தாவா சொத்தை பொறுத்து மோசடியாக கிரைய ஆவணம் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

6) தாவா சொத்தில் தற்போதைய மதிப்பு 1.5 கோடி ரூபாய் இருக்கும், அதை மறைத்து ரூ. 72,000/−ற்கு நான் 2ம் பிரதிவாதிக்கு பி.வா.சா.ஆ.14 ஆவணம் மோசடியாக ஏற்படுத்தியுள்ளேன் என்றால் சரியல்ல. நானும், 1 முதல் 3 பிரதிவாதிகளும் கூட்டு சேர்ந்து பி.வா.சா.ஆ.14 மோசடியாக ஏற்படுத்தியுள்ளோம் என்றால் சரியல்ல. நான் நல்ல எண்ணத்தோடு தாவா சொத்தினை கிரையம் பெறாததால் இவ்வழக்கில் வாதிகள் கோரியுள்ள பரிகாரம் அவர்களுக்கு கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.14 ஆவணம் மோசடியாக ஏற்படுத்தப்பட்டுள்ளதால், மேற்படி ஆவணம் செல்லாது என விளம்புகை செய்ய வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

7) எனது நிரூபண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளது போல் வாதிகள் 1ம் பிரதிவாதிக்கான மருத்துவ செலவுகளை செய்யவில்லை என்றும், 1ம் பிரதிவாதி வெளியில் கடன் பெற்று தான் மருத்துவ செலவுகள் செய்தார் என்று வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனது நிரூபண வாக்குமூலமானது 2ம் பிரதிவாதி சொன்னதின் அடிப்படையில் தயார் செய்யப்பட்டது என்பதால், எனது சாட்சியம் முன்னுக்குப் பின் முரணாக உள்ளது என்றால் சரியல்ல. எனது சாட்சியம் முன்னுக்குப் பின் முரணாக உள்ளதால், இவ்வழக்கில் வாதிகள் கோரியுள்ள பரிகாரம் அவர்களுக்கு கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை –** இல்லை

Taken down by me/before me in open court on **20-04-2026** and read over to the witness in the presence of counsel interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct.

RAGUNATH K District Munsif, Digitally signed by RAGUNATH K Location: Periyakulam. Dt 20.04.2026

District Munsif,
Periyakulam.